[1970 மார்ச் 2

தொழில் சங்கங்களுடன் கடிதத் தொடர்பு

* 168 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா:

தொழிலாளர் நல இலாகாவிலிருந்து தொழிற் சங்கங்களுக்கு அனுப்பப்படுகின்ற எல்லா விதமான தாக்கீதுகளும் தமிழில், ஓர் குறிப்பிட்ட காலத்திற்குள் கொண்டுவர அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தொழிற் சங்கங்களிட மிருந்து தமிழில் அனுப்பப்படும் எல்லாக் கடிதங்களுக்கும் தமிழில் பதில் அனுப்பப்பட்டு வருகின்றன. விசாரணைகள், தகவல்கள் முதலியன பற்றிய அறிவிப்புகள் அனைத்தும் தமிழில் தமிழ் வரை வுகளின் வடிவத்தில் தொழிற் சங்கங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மேலும் தொழிற்சங்கங்களுக்கும் ஆண்டு விவர அறிக்கையின் படிகள் தமிழில் அளிக்கப்பட்டு வருகின்றன.

திரு. சு. துரைசாமி: தொழிற்சங்கங்களுக்கு கன்சிலியேஷன் ரிபோர்ட்டுகளை லேபர் ஆபீசர்கள் அனுப்புகின்ற நேரத்தில் ஆங்கி லத்தில் அனுப்புகிறார்கள். அதையும் தமிழிலேயே அனுப்பு வதற்கான ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டு வந்தால், அதனால் தொழிற்சங்கங்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, தொழிற்சங்கங்கள் சம்பந்தப்பட்டவரையில் எல்லாவிதமான நடவடிக்கைகளையும், ஒரு காலவரை குறிப்பிட்டு, அதற்குள்ளாகத் தமிழிலேயே கொண்டுவர அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சொல்லுகிற பேச்சு வார்த்தைகளுடைய விவரங்களைப் பற்றிய அறிக்கை அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகிறது. அதையும் தமிழிலேயே அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்-விடைகள் முடி வுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (■) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்ப தைக் குறிக்கும்.)

(2) அவையுரிமைக் கேள்வி

நிதிநிலை அறிக்கை இரகசியம் வெளியிடப் பட்டதாகக் கருதப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பேரில் ஓர் உரிமைப் பிரச்னையைக் கொண்டு வருவதற்கு அறிவிக்கை கொடுத் திருக்கிறார்கள். அதைபற்றிச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.